அ.வ எண் 130/2021 வேல்ச்சாமி(வாசா1) தேதி:16.10.2023

1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

சொத்தை ஆண்டிஎன்பவரிடம் நான் கிரையம்பெற்றதாக சொல்கிறேன் என்றுசொன்னால் சரிதான். மேற்படி கிரையம் எழுதுவதற்கு முன்னர் சொத்து எப்படி ஆண்டிக்கு கிடைத்தது என்று நான் அவரிடம் கேட்டேனா? என்றால் சாட்சி கேள்விக்கு பதில் அளிக்காமல் அவர் சொத்தை விற்பதாக சொன்னதால் நான் கிரையம்பெற்றேன் என்று சாட்சியமளிக்கிறார். என்னிடம் காட்டப்படும் வா..சா.ஆ.1 கிரையஆவணத்தில் சொத்தானது ஆண்டிக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றுசொன்னால்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்திலும், சொத்து ஆண்டிக்கோனாருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் ஆண்டிகோனர்மீது தாவாசொத்தை பொருத்து விளாத்திகுளம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.167/1995 என்ற பாகபிரிவினை வழக்கு தொடர்ந்தார்களா? என்றால் ராமசந்திரன் என்பவர்தான் மேற்படி வழக்கை தாக்கல் செய்தார். இந்த வழக்கில் மேற்படி ராமசந்திரன் கட்சி இல்லை என்றுசொன்னால் சரிதான். விளாத்திகுளம் வழக்கை பற்றி எனக்கு எப்போது தெரியும் என்றால் 4 அல்லது 5 வருடங்களுக்கு முன்னர் நிலத்திற்கு இன்சூரன்ஸ்போடுவதற்காக சென்றபோது கிராம நிர்வாக அதிகாரி வழக்கை பற்றி என்னிடம்சொன்னார். விளாத்திகுளம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.167/1995 உத்தரவு செல்லாதது என்று அறிவிக்ககோரி நான் வழக்கு தாக்கல் ்செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கு எண்.167/1995 வழக்கானது 29.07.2003ல் தேதியில் இந்த தாவாசொத்து மற்றும் பிற சொத்துக்கள் சம்பந்தமாக 3/4 பங்கு இந்த பிரதிவாதிகளுக்கு உண்டு என்று தீர்ப்பு பகரப்பட்டு அதனை அனுசரித்து இந்த பிரதிவாதிகள் வ.வி.எண்.168/2005 இறுதிநிலை தீர்ப்பாணை மனு தாக்கல் செய்து ஆணையர் நியமனம்செய்யப்பட்டு பிரதிவாதிகளுக்கு பங்கு ஒதுக்கப்பட்டு 5.4.2011ல் தேதியில் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு அதனடிப்படையில் தாவாசொத்தை பிரதிவாதிகள் அனுபவம்செய்துவரும் விசயம் எனக்கு நன்றாக தெரியும் என்றுசொன்னால் சரியல்ல. விளாத்திகுளம் நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புக்குஎதிராக மேல்முறையீடு ஆண்டிகோனார் செய்யவில்லை என்றால் அதுபற்றி

எனக்கு தெரியாது. மேற்படி தீர்ப்புபற்றிய முழுவிவரம் எனக்குதெரியாது. மேற்படி தீர்ப்புபற்றி எனக்குதெரியாத சூழ்நிலையில் இந்த பிரதிவாதிகள் அசல் வழக்கு எண்.167/1995 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை ஒத்திசைவு தீர்ப்பாணை என்று என்னால் கூறமுடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்துசம்பந்தமாக இந்து வாரீசு சட்டத்தின்படி மொத்தசொத்தையும் ஆண்டிக்கோனார் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 கிரையஆவணங்கள் மூலமாக கிரையம்கொடுப்பதற்கு எந்தஉரிமையும் கிடையாது என்றுசொன்னால் சரியல்ல. மேற்படிஅசல் வழக்கு 167/1995 வழக்கின் தீர்ப்பாணையின்படி தாவாசொத்து சம்பந்தமாக பட்டா எண்.1800 பிரதிவாதிகள் பெயரில் முழுவிசாரணைக்குபிறகு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி பட்டா வழங்கியது சம்பந்தமாக நான்கோவில்பட்டி கோட்டாட்சியர் முன்பு மேல்முறையீடுதாக்கல் செய்தேன் என்றால்சரிதான். மேற்படி கோட்டாட்சியர் முன்பு இந்த பிரதிவாதிகள்ஆஜரானார்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் தாவாசொத்தில் பட்டாவில்இருந்து அவர்களது பெயரை நீக்கம்செய்வதற்கு ஒதுபோதும் என்னிடம்சம்மதித்தது கிடையாது என்றுசொன்னால் சரியல்ல. இந்த நீதிமன்றத்தில் மந்திகுளம் புலஎண்.கள்.255/1, 125/7. 125/10 இந்த சொத்துக்களை தமிழ்நாடுஅரசு நிலஆர்ஜிதம்செய்து அதுவகை வழங்கப்பட்ட இழப்பீட்டுத்தொகையில் தங்கள் பங்கினை கேட்டு தங்களுக்கு கிரையம்கொடுத்ததாக சொன்ன தகப்பனார் ஆண்டிக்கோனார் மீது அ.வ.எண்.99/1998 என்ற வழக்கை இந்த வழக்கின் 1,2 பிரதிவாதிகள் தாக்கல் செய்து, மேற்படி வழக்கிலும் இந்த 1,2 பிரதிவாதிகளுக்கு மேற்படி சொத்துக்களில் அவர்களுக்குரிய பங்கு வழங்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இந்துவாரீசு உரிமைசட்டத்தின்படி தாவாமுழுச்சொத்தையும் வா.சா.ஆ.1,2 கிரையஆவணத்தின்மூலம் கிரையம்கொடுப்பதற்கு ஆண்டிக்கோனாருக்கு உரிமையில்லை என்றும் எனவே மேற்படி கிரையம் இந்த பிரதிவாதிகளை கட்டுபடுத்தாது என்றுசொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் அனுப்பிய பதில் அறிவிப்பிற்கு நாங்கள் மறுஅறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரிதான். அ.வ.எண்.167/1995 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு ஒத்திசைவு தீர்ப்பாணை என்று வழக்கிற்காக பின்னிட்டு யோசானை வழக்காடுகிறேன் என்றுசொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரைஉள்ள கிரையஆவணங்கள் சட்டப்படிசெல்லுபடிஆகாத ஆவணங்கள் என்பதால்தான் கேட்டகேள்விகளுக்கு

மழுப்பலான பதிலை அளிக்கிறேன் என்றுசொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 கிரையஆவணங்களில் 1 மற்றும் 3 பிரதிவாதிகள் கட்சிகிடையாது என்பதால் மேற்படி ஆவணம் அவர்களை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 மற்றும் 2 கிரையஆவணத்தில் கண்டுள்ள ராமசந்திரன் என்ற நபர் ஆண்டிகோனாரின் வாரீசு கிடையாது என்றும், மேற்படி ராமசந்திரனுக்கும் தாவாசொத்திற்கும் எந்தசம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 1 மற்றும் 2 ஆவணங்களுக்கு முன்னரே 1,3 பிரதிவாதிகள் பிறந்துவிட்டார்கள் என்றால் அதுபற்றி எனக்குதெரியாது. எனவே மேற்படி 1,3 பிரதிவாதிகளின் உரிமையை மறைத்து ஆண்டிக்கோனார் எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.1,2 கிரையஆவணங்கள் செல்லுபடி ஆகாது என்றுசொன்னால் சரியல்ல. அசல் வழக்கு 167/1995 வழக்கின் தீர்ப்பின்படி மேற்படி ஆண்டிக்கோனாருக்கு 1/4 பங்குமட்டுமே தாவாசொத்தில் உரிமைமூலம் ஏற்பட்டுள்ளது என்றும், எனவே தாவா முழுசொத்துசம்பந்தமாக ஆண்டிகோனார் எழுதிகொடுத்த வா.சா.ஆ.1 மற்றும் 2 கிரையஆவணங்கள் செல்லுபடிஆகாது என்றுசொன்னால் சரியல்ல. தாவாசொத்தில் தற்போதும் 1 மற்றும் 3 பிரதிவாதிகள் அனுபவத்தில் இருந்துவருகிறார்கள் என்றால் சரியல்ல. நான்கேட்டுள்ள பரிகாரம் எதுவும் கிடைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல. நான்தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4 பட்டா பாஸ்புக் மற்றம் வா.சா.ஆ.5 கணிணிபட்டா ஆகியவை தாவாசொத்து முழுமைக்கும் சம்பந்தமாக வழங்கப்பட்டது சட்டப்படி செல்லுபடி ஆகாது என்றுசொன்னால் சரியல்ல. மேற்படி பட்டாவின் அடிப்படையில் நான்தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.7 தீர்வைரசீதுகள் சட்டப்படிசெல்லுபடி ஆகாது என்றுசொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்)R.Rathinavel Pandian
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி